**கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் - 2020**

கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்டெம்பர் 12 ஆந் திகதிய 5428- எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவு மற்றும் 2016 யூலை 20 ஆந் திகதியில் 5800-எல்கே ஆம் இலக்க மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராகக் காணப்படுகின்றது.

இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கண்டி நகர பிராந்திய நகர்ப்புற தலையீடு, காலி நகர பிராந்திய நகர தலையீடு, யாழ்ப்பாண நகர பிராந்திய நகர்ப்புற தலையீடு மற்றும் திட்ட முகாமைத்துவம் ஆகிய செயற்திட்ட நடவடிக்கைகளின் நான்கு கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 34,912.48 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 257.08 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 27,507 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 7,405.48 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள ் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள ்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள ்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடு | முகாமைத்தவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிலாளர் நீதிமன்றத்தின்ால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் இழப்பீட்டினை செலுத்துவதற்க தேவையான ரூபா. 1.5 மில்லியன் தொகையானது ஒதுக்கீடு நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகளுடன் நாங்கள் உடன்படுகின்றோம். | நிதிக்கூற்றில் முடிவடைந்த ஆண்டிற்கான செலுத்த வேண்டியவைகளின் பெறுமதிகள் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா. 2.24 மில்லியன் பெறுமதியான பிடிப்பணானது ரூபா. 22.41 மில்லியனாக கட்டுமானப்பணியுடன் தொடர்புபட்ட ஒப்பந்தத்தில் தவறுதலாக கணக்கிடப்பட்டிருந்தன. அதன் விளைவாக, பிடிப்பண மீதியும் மற்றும் வடிகால்கள் மேம்பாடுகள் கணக்கு ரூபா. 20.17 மில்லியனினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன. | இது அச்சிடலின் போது ஏற்பட்ட தவறு | நிதிக்கூற்றுக்களில் பிடிப்பணத்தின் உண்மைப் பெறுமதியானது காட்டப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்**

| கூறுகள் | செயற்பாடுகள் | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களுக்கான காரணங்கள் | முகாமைத்தவ பதிலகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ)செயற்திட்ட அபிவிருத்தி குறிக்கோள்கள் (PDO) | நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தி | செயற்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், மோசமான செயல் திறன் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தன. மேலும், இச்செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பயனாளிகளின் 600,000 பேராக இருந்தபோதிலும் உண்மையான பயனாளிகள் 400,000 பேராக குறைவடைந்துள்ளனர். | செயற்திட்ட நடவடிக்கைகளின் மோசமான செயலாற்றல்கள் | செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்படும் பயனாளிகள் குறைக்கப்படுவது முக்கியமாக KMTT நடவடிக்கை மற்றும் ஐ.அமெரிக்க டொலர் 92.0 மில்லியன் ரத்து செய்யப்பட்டதன் காரணமாகும். (கொவிட்க்கு ஐ.அமெரிக்க டொலர் 27.0 மற்றும் KMTT இற்கு ஐ.அமெரிக்க டொலர் 65.0) | திட்டமிடப்பட்ட காலப்பகுதியின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு சிறந்த மற்றும் பயனுள்ள செயற்திட்ட முகாமைத்துவ முறைமைகளை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ)காலி நகரத்தின் வெள்ளக் கட்டுப்பாட்டு முறைமை | வடிகால் முறைமைகளின் வெள்ளக்கட்டுப்பபாடு மற்றும் நீர்தேங்கும் பகுதிகளை மேம்படுத்துதல். | காலி நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னர், மொரகொட கால்வாய் படுகைகளை ஒட்டி அமைந்துள்ள 10 இடங்களை வெள்ளக் கட்டுப்பாட்டு நிலையங்களாக ஆலோசனை நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. அந்த இடங்களை நீர் தேக்க நிலங்களாக அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நிலங்களை | காலியில் அந்தந்த பொது அதிகாரிகளுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்புகள் இல்லாமை. | சதுப்பு நில முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குாணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் வேறு அரசு நிறுவனங்களுடன் சரியான ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். திறமையான திட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | கையகப்படுத்துவதில் திட்டம் தோல்வியடைந்தது மற்றும் ஈரநில முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்படவில்லை. காலி நிர்வாக தொகுதி மற்றும் ஏனைய காணி சுவீகரிப்பு முன்மொழிவுகள் காரணமாக நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதன்படி, தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே, சரியான ஒருங்கிணைப்பு இல்லாமல் இருப்பது தெரியவந்ததினால் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. மேலும், காலி நகரில் 16 வெள்ளத்தடுப்பு வடிகால் அமைப்புகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை மற்றும் பணிகளுக்கு தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்படவில்லை. இந்த நிலைமை திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் வெள்ளத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் நேரடியாகப் பாதிக்கப்பட்டது. | | | முகாமைத்துவ முறைமையை செயல்படுத்துவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட பொதுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (இ) கண்டி பல்வகை போக்குவரத்து முனையத்தின் மறுசீரமைப்பு (KMTT) | IDA இனால் கண்டி மல்டிமோட் போக்குவரத்து முனையத்தின் மறுசீரமைப்பு கட்டுமான வேலைக்காக செலவினமாக ரூபா.9,316.60 மில்லியன் (ஐ.அமெரிக்க டொலர 60.11 மில்லியன்) நிதியுதவியில் ரூபா.419.52 மில்லியன் செலவழித்த பின்னரும், செயற்திட்ட காலத்துக்குள் கட்டுமானப் பணிகளை முடிக்க போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | வடிவமைப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள்குடியேற்றுவதில் ஏற்பட்ட தாமதம் | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் SCDP இற்காக ஒதுக்கப்பட்ட உலக வங்கி நிதியிலிருந்து ஐ.அமெரிக்க டொலர் 65 மில்லியன்கள் அகற்றப்பட்டிருந்தன. | செயற்திட்ட நடவடிக்கைகளை முழுமையாக நிறைவேற்றுவதன் மூலம் செயற்திட்ட நோக்கத்தையடைய சிறந்த மற்றும் வினைத்திறன் முகாமைத்துவ முறைமைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்தவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிரந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்தன. 06 வருடங்கள் முடிவடைந்த பிறகு, 57 ஒப்பந்தங்கள் மட்டுமே கட்டுமான வேலைகள், பொருட்கள் மற்றும் ஆலோசனைக்கான பெறுமதி ஐ.அமெரிக்க டொலர் 35.44 மில்லியனால் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்த செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதியுடன் ஒப்பிடும் போது 17 சதவீதத்திலும் குறைவான முன்னேற்றத்தை வெளிப்படுத்துகின்றன. ஐ.அமெரிக்க டொலர் 0.66 மில்லியன் பெறுமதியில் இனங்காணப்பட்ட ஒப்பந்த வேலைகளில் 04 ஒப்பந்த வேலையானது பெறுகை நடைமுறை நிலையிலே காணப்படுகின்றது. மீளாய்வாண்டில் ஐ.அமெரிக்க டொலர் 40.95 மில்லியன் பெறுமதியான 23 ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. | கருத்துரையில்லை | தற்போதைய முன்னேற்றத்தை மதிப்பீடு செய்த பின்னர், மிகுதியாகவுள்ள ஒப்பந்த வேலைகளுக்கு செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆகஸ்ட் 12 ஆம் திகதியில் யாழ்ப்பாணத்தின் நிர்மாணப் பணிகள் பொன்னாலை- பருத்தித்துறை வீதி (AB21), ரூபா.1,110.15 மில்லியன் நிர்மாணச் செலவுடன் ஆரம்பிக்கப்பட்டு 2021 மே 15 ஆம் திகதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், 2021 மார்ச் வரையிலான கட்டுமானப் பணிகளின் பௌதீக முன்னேற்றம், அன்றைய திகதியில் எதிர்பார்க்கப்பட்ட 65 சதவீத முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது, 33 சதவீதமாக மட்டுமே காணப்பட்டன. வீதிகளின் 46 மதகுகளில் 21 மதகுகள் மடடுமே முழுமையாக நிறைவடைந்திருந்ததுடன் 08 மதகுகள் பகுதியளவில் கட்டி முடிக்கப்பட்டிருந்தன. தளத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் தொழிலாளர்களை போதுமான அளவில் வழங்காதது மற்றும் ஆலோசகர்களின் சரியான நேரத்தில் மேற்பார்வை இல்லாதது ஆகியவை தாமதத்திற்கு நேரடியான காரணமாகவுள்ளது. மேலும், தற்போதைய நிலைமையை ஒப்பந்ததாரருக்கு 02 மாத கால நீட்டிப்புக்களை குறைக்க வழங்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தக்காரர்களின் செயற்பாடுகள் மிகவும் மோசமானதாக இருந்தது. | தற்போதைய முன்னேற்றத்தை மதிப்பீடு செய்த பின்னர், மிகுதியாகவுள்ள வேலைகளுக்கு செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | யாழ்ப்பாணம்(AB-31) வீதியின் நிர்மாண வேலைகள் ரூபா.1,122.9 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. பொறியாளர் மதிப்பீடுகளுடன் ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த BOQ விலையினை ஒப்பிடுகையில், குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இருப்பினும், இது தொடர்பாக செயற்திட்டத்தால் விகித பகுப்பாய்வு நடத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், வடிவமைப்பு மாற்றங்கள் காரணமாக BOQ விலைகள் பின்னர் திருத்தப்பட்டன, இதன் விளைவாக ரூபா.85.23 மில்லியன் மதிப்புள்ள 54 BOQ பொருட்கள் இரத்து செய்யப்பட்டன. இருந்தும் கூட, மேலதிக வேலைக்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா.87.52 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தன. | இந்த ஒப்பந்தம் TEC ஆல் மதிப்பீடு செய்யப்பட்டு SCAPC ஆல் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் அமைச்சரவை ஒப்புதலுடன் வழங்கப்பட்டது. | (i) செயற்திட்டத்தில் முழுமையான பௌதீக திட்டங்களுக்கமைய செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு சிறந்த மற்றும் பயனுள்ள செயற்திட்ட முகாமைத்துவ முறைமைகளை அமுல்படுத்தப்பட வேண்டும்.<br><br>(ii) செயற்திட்டத்தினால் BOQ பொருட்களின் விலை தொடர்பான பகுப்பாய்வு நடத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வடிவமைப்புத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் அந்தத் திட்டங்களின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகளை சரியான நேரத்தில் நடத்தத் தவறியதால், மீளாய்வாண்டின் இறுதியில் யாழ்ப்பாண நகரினை ரூபா.3,380.70 மில்லியன் (ஐ.அமெரிக்க டொலர் 19.66 மில்லியன்) மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்ட 09 உபசெயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, உப செயற்திட்டங்களினால் எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகளுடன் ஏற்றுக்கொள்கின்றோம். | செயற்திட்டத்தில் முழுமையான பௌதீக திட்டங்களுக்கமைய செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு சிறந்த மற்றும் பயனுள்ள செயற்திட்ட முகாமைத்துவ முறைமைகளை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2015 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் திறமையற்ற முறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டதன் காரணமாக, ரூபா.3,618.18 மில்லியன் (ஐ.அமெரிக்க டொலர் 20.19 மில்லியன்) செலவில் வழங்கப்பட்ட ஐந்து உப ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இடைநிறுத்தப்பட வேண்டியிருந்தது. எனவே, 2021 திசெம்பர் 31 இற்குள் செயற்திட்டக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அந்தத் உப செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றப்பட்டன. ஒப்பந்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 08 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட செலவு, உப செயற்திட்டங்களின் நோக்கத்தை | கருத்துரைகளுடன் ஏற்றுக்கொள்கின்றோம். | செயற்திட்டத்தில் முழுமையான பௌதீக திட்டங்களுக்கமைய செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு சிறந்த மற்றும் பயனுள்ள செயற்திட்ட முகாமைத்துவ முறைமைகளை அமுல்படுத்தப்பட வேண்டும். |

மாற்றும் போது, 340.64 மில்லியனாக மீள் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இதனால், அந்த செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் அடையப்பட முடியவில்லை.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய வளம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்தவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| கடனளிக்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 27,507 மில்லியனிற்குச் சமமான ஐ.அமெரிக்க டொலர் 202 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 36 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ரூபா.11,645.24 மில்லியனிற்கு சமமமான ஐ.அமெரிக்க டொலர் 72.61 மில்லியன் தொகையினால் மாத்திரமே செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 6½ ஆண்டுகள் கடந்த பின்னர் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூபா.732.60 மில்லியனிற்கு சமமான ஐ.அமெரிக்க டொலர் 3.93 மில்லியன் மீதி செயற்திட்ட நடவடிக்கைகளின் மெதுவான செயன்முன்னேற்றம் மற்றும் மோசமான நிதி எதிர்வுகூறல் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் பயன்படுத்தப்படாமல் விசேட (டொலர்) கணக்கில் காணப்பட்டது. | கருத்துரைகளுடன் ஏற்றுக்கொள்கின்றோம். 2014 யூலை 01 ஆம் திகதியில் ஐ.அமெரிக்க டொலர் 147.0 மில்லியன் பெறுமதியான நிதியில் தொடங்கப்பட்டது. 2016.10.19 ஆம் திகதியில் மேலதிக நிதியாக ஐ.அமெரிக்க டொலர் 55.0 மில்லியன் பெறப்பட்டிருந்தன. செயற்திட்டங்களின் குறித்த இலக்குகளின் பௌதீக ரீதியான செயலாற்றல் குறைவான நிதி ஒதுக்கீடு காரணமாக அமுல்படுத்தப்பட முடியாமல் இருந்தது. | முழுமையாக ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்துவதற்கும் மற்றும் சரியான நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செயல் திட்டங்களுடன் உண்மையான செயலாற்றல்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 140 பல்வேறு வகைப் பதவிகளை கொண்டிருந்த போதிலும், 03 வருடங்களுக்கும் மேலாக பிரதி செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட பொறியியலாளர்கள் 16 முக்கிய பதவிகள் உள்ளடங்கிய 51 வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிலிருந்து 78 செயற்திட்ட உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகியிருந்தமை மற்றும் 2020 நவம்பர் காணப்படுகின்ற பதவியணிகள் மீள்திருத்தப்பட்டிருந்தன. மேலும் அவதானிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட பதவியணி பற்றாக்குறைகள் மற்றும் பதவியணி மீள்திருத்தங்கள் செயற்திட்டத்தின் மெதுவான செயன்முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

| இல ---- | பதவியணியினர் ------------- | பதவிகளின் எண்ணிக்கை --------------------------------- | | | கணக்காய்வு விடயம் ---------------------------- | முகாமைத்தவ பதில் -------------------------- | கணக்காய்வாளரின் பரிந்துரை -------------------- |
|---|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்டது ------------ | 2020 திசெம்பர் 31 இல் உள்ள உண்மையான ------------- | வெற்றிடங்களின் /மிகைகளின் எண்ணிக்கை ----------- | | | |
| 01 | அனைத்து உத்தியோகத்தர்களும் | 140 | 89 | 51 | செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 140 பல்வேறு வகைப் பதவிகளை கொண்டிருந்த போதிலும், 03 வருடங்களுக்கும் மேலாக பிரதி செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட பொறியியலாளர்கள் 16 முக்கிய பதவிகள் உள்ளடங்கிய 51 வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அவதானிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட பதவியணி பற்றாக்குறைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளின் மெதுவான செயன் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன. | தேவைகள் இருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியிலும் 2020 ஆம் ஆண்டிலும் ஆட்சேர்ப்புகளை கட்டுப்படுத்துவதற்கான கொள்கை தீர்மானத்தை அரசாங்கம் எடுத்திருந்ததால், ஆட்சேர்ப்புகள் எதுவும் செய்யப்படவில்லை. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்திட்ட அமுலாக்கம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப செயற்திட்டத்தின் ஊழியர்களை எண்ணிக்கை மேலும் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளன. எனவே, அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளுக்கு எதிராக தற்போதுள்ள ஊழியர்கள் கணிசமாகக் குறைவாக உள்ளனர். | பதவியணி அங்கீரத்தின் பிரகாரம் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

## 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்தவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பெப்ரவரி 09 ஆம் திகதியிடப்பட்ட NP/UDH/UD/3/13/1B இலக்கம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின பிரகாரம் செயற்திட்டத்தின் சேமிப்பு தொகையான ஐ.அமெரிக்க டொலர் 27 மில்லியன் நகர அபிவிருத்தியின் முன்னுரிமை அபிவிருத்தி செயற்திட்டங்களுக்க பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், கொவிட் -19 தடுப்பூசி திட்டத்திற்கு அந்த சேமிப்புப் பயன்படுத்தப்பட்டிருந்தன. | அவதானிப்புடன் ஏற்றுக்கொள்கின்றேன். | திறைசேரியின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மாதாந்தம் அதிகபட்சமாக 2500 கிலோமீட்டர் வரையிலான மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவது தொடர்பான செயற்திட்ட ஒப்பந்தங்களின்படி ஓட்டப்பட வேண்டும் மற்றும் மேலதிகமாக கிலோமீட்டர்களுக்கு கூடுதல் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அதிகபட்ச வரையறை 2500 கிலோமீட்டரை விட கூடுதலாக 58,575 கிலோமீட்டர்கள் மேலதிகமாக ஓடியதனால் செயற்திட்டத்தினால் ரூபா.3.06 மில்லியன் செலவிடப்பட்டமை வெதானிக்கப்பட்டன. மேலும் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தினால் விலைமனு கோரப்பட்டிருக்கவில்லை. மற்றும் முன்னைய ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு வாடகை வாகன உரிமைக் கம்பனியின் சேவிஸ்களைப் பயன்படுத்தியிருந்தனர். | தொடர்ந்து வரும் மாதங்களில் இந்த நிலைமையை மேம்படுத்துவது குறிப்பிடத்தக்கது. | பொருளாதாரம் மற்றும் செயல்திறன் கொள்கைகளின் அடிப்படையில் பிரகாரம் செயற்திட்டச் செலவினங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா. 210,000 பெறுமதியான மாதாந்த வாடகையில் வாடகை அடிப்படையில் மேலதிக செயற்திட்ட பணிப்பாளருக்கு (APD) டபிள் கப் (Double Cab) வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், வாகன வாடகை கம்பனியின் மூலம் வாகன வாடகையாக செயற்திட்டத்திலிருந்து கூட்டு மொத்தம் ரூபா. 2,750,443 தொகையானது கோரிப்பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. மற்றும் அலுவலக கடமைகளுக்கு வாடகை வாகனத்தினை பயன்படுத்துவதற்க பதிலாக APD தனது சொந்த வாகனத்தை தானே சுயமாக ஓட்டிப் பயன்படுத்தினார். இருப்பினும், இந்த மோசடியான விடயத்தினை கருத்தில் கொண்டு செயற்திட்டத்தினால் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் தொடர்பான முழுமையான விசாரணை மேற்கொள்வது நல்லது. | பொருளாதாரம் மற்றும் செயல்திறன் கொள்கைகளின் அடிப்படையில் பிரகாரம் செயற்திட்டச் செலவினங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |